සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2018 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2017 செப்ரெம்பர்**

Competitive Examination for Admission of students to Sri Lanka Law College for Academic Year 2018 - September 2017

**(01) மொழித்திறன் (தமிழ்)**
Language Skills (Tamil)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✻ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

......................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✻ இவ்வினாத்தாள் **08** பக்கங்களில் **38** வினாக்களைக் கொண்டுள்ளது.

✻ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✻ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக. விடை எழுதுவதற்குத் தரப்பட்டுள்ள இடம் போதுமானதாக இல்லாவிடில் மேலதிக தாள்களைப் பெற்றுக்கொள்க.

✻ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் மூன்று மணித்தியாலம் ஆகும்.

✻ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✻ உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

✻ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✻ கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

✻ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✻ தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 15 | |
| 3 | 16 - 26 | |
| 4 | 27 - 35 | |
| 4 - 5 | 36 | |
| 6 - 7 | 37 | |
| 7 - 8 | 38 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க

- **1** தொடக்கம் **3** வரையான வினாக்களில் பிழையாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லை அடையாளம் கண்டு அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

1. (1) சுவீகரிப்பு (2) ஆர்பாட்டம் (3) ஆள்மாறாட்டம் (4) ஆட்கொணர்வு (.........)
2. (1) பன்னிரண்டு (2) பதினான்கு (3) முப்பத்தியேழு (4) தொண்ணூற்றாறு (.........)
3. (1) ஏற்கெனவே (2) தற்போதைய (3) மேம்பாடு (4) விழிப்புக்குழு (.........)

*(03 புள்ளிகள்)*

- **4** தொடக்கம் **6** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை நெடுங்கணக்கு அகரவரிசைக்கு ஒழுங்கமைக்கும் போது அதனை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

4. (அ) வழக்கு (ஆ) பொழிப்பு (இ) முழுக்கு (ஈ) நடுநிலை
   (1) ஈ, அ, ஆ, இ (2) ஆ, ஈ, அ, இ (3) ஈ, ஆ, இ, அ (4) ஆ, இ, ஈ, அ (.........)
5. (அ) தருமம் (ஆ) தோரணம் (இ) தூவானம் (ஈ) திரவம்
   (1) அ, இ, ஈ, ஆ (2) அ, ஈ, இ, ஆ (3) ஈ, அ, இ, ஆ (4) இ, ஆ, அ, ஈ (.........)
6. (அ) வையம் (ஆ) குருதி (இ) மாயம் (ஈ) யோகம்
   (1) ஆ, அ, இ, ஈ (2) இ, ஆ, அ, ஈ (3) ஈ, இ, ஆ, அ (4) ஆ, இ, ஈ, அ (.........)

*(03 புள்ளிகள்)*

- **7** தொடக்கம் **9** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்தினால் வரும் புணர்மொழியை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

7. கை + நூல்
   (1) கைநூல் (2) கைனூல் (3) கைன்னூல் (4) கைந்நூல் (.........)
8. பால் + நிறம்
   (1) பாநிறம் (2) பால்நிறம் (3) பானிறம் (4) பான்நிறம் (.........)
9. நான்கு + நான்கு
   (1) நந்நான்கு (2) நன்னான்கு (3) நான்குநான்கு (4) நன்நாங்கு (.........)

*(03 புள்ளிகள்)*

- **10** ஆம் வினாவில் மாறியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் கருத்துள்ள சொல் ஒன்று வரும். **அச்சொல்லை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

10. பி, ம், ப், சா, வ, ர, த, ர (.....................................)

*(01 புள்ளி)*

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் அவற்றை திருத்தி மீண்டும் அதனை சரி செய்து முழுமையான வாக்கியங்களை வினாவின் கீழே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக. அது சரியாயின் **'சரி'** என மட்டும் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

11. தூரத்தில் இருக்கும் மலைகள் பார்வைக்குச் சிறியதாய் தெரியும்.

..........................................................................................

12. இக்கொடுமையைச் செய்தவன் அவனா? அவளா?

..........................................................................................

13. இங்கு பல்வேறு வகைப்பட்ட பறவைகளும் மிருகங்களையும் காணலாம்.

..........................................................................................

14. பணத்தையாவது அல்லது பத்திரத்தையாவது குறித்த தவணையில் தராவிட்டால் சட்ட நடவடிக்கைதான் எடுக்கநேரிடும்.

..........................................................................................

15. சகாதேவன் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவன்.

..........................................................................................

*(05 புள்ளிகள்)*

[பக் 3 ஐப் பார்க்க

● **16** தொடக்கம் **20** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள மரபுச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் தரும் சரியான கருத்தைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

16. கடைத்தேறுதல்
 (1) தெளிவுபெறல் (2) ஈடேறுதல்
 (3) கேடு செய்தல் (4) இழிவடைதல் (.........)

17. ஒன்றுக்குமற்றவன்
 (1) செலவாளி (2) இரந்துண்போன்
 (3) பயனற்றவன் (4) பதற்றக்காரன் (.........)

18. கடுக்காய் கொடுத்தல்
 (1) பொய்ச்செய்தி கிளப்புதல் (2) ஏமாற்றுதல்
 (3) உறுதியாகக் கூறுதல் (4) தகாத செயலில் ஈடுபடல் (.........)

19. தோப்புக்கரணம் போடுதல்
 (1) சொன்னபடியெல்லாம் நடத்தல் (2) அரியதைச் செய்ய முயலுதல்
 (3) அரைகுறையாக வேலை செய்தல் (4) சிந்தனையின்றி உடன்படுதல் (.........)

20. பட்டுத்தரித்தல்
 (1) அனுபவத்தினால் அறிதல் (2) கட்டளைக்கு உட்படுதல்
 (3) துன்பத்தைப் பொறுத்தல் (4) உலர்ந்து போதல் (.........)

*(05 புள்ளிகள்)*

● **21** தொடக்கம் **23** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றும் தரும் கருத்தினைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக..

21. கழுதை அறியுமோ கற்பூர வாசனையை?
 (1) கல்லாதவர் கற்றவரோடு சேர்வது பயன்தரும்.
 (2) கற்றோரைக் கற்றோரன்றி மற்றோர் அறியார்.
 (3) கல்வியறிவற்றவர் கூறும் வார்த்தை எவராலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
 (4) கழுதைக்கு கற்பூரவாசனை பற்றி எதுவும் தெரியாது. (.........)

22. உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்
 (1) பொய் கூறி இரந்து வாழ்பவரும் இவ்வுலகில் உளர்.
 (2) பிறரை வஞ்சித்து வாழ்பவர் ஈற்றில் வறுமையில் வாடுவர்.
 (3) ஏமாற்ற நினைப்பவன் ஈற்றில் ஏமாளியாவான்.
 (4) பொறுமை இழந்தவர் ஈற்றில் துன்பமடைவர். (.........)

23. பொன்னின் குடத்துக்குப் பொட்டிட வேண்டுமா?
 (1) பெறுமதி மிக்க பொருள் என்றும் பெறுமதியுடையதே.
 (2) பொற்குடத்திற்குப் பொட்டிடுவதால் எவ்வித பயனுமில்லை.
 (3) அழகுக்கு அழகு செய்ய வேண்டிய அவசியமில்லை.
 (4) விளக்குமாற்றுக்கு எவரும் பட்டுக் குஞ்சம் கட்டுவரா? (.........)

*(03 புள்ளிகள்)*

● **24** தொடக்கம் **26** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் ஒத்தகருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

24. சிலாகித்தல்
 (1) தூற்றுதல் (2) விமர்சித்தல் (3) அழித்தல் (4) புகழ்தல் (.........)

25. தாட்சணியம்
 (1) சுபாவம் (2) இரக்கம் (3) நிந்தனை (4) காணிக்கை (.........)

26. புரவலர்
 (1) வள்ளல் (2) பேரறிவாளி (3) சான்றோன் (4) இரப்பவர் (.........)

*(03 புள்ளிகள்)*

[பக் 4 ஐப் பார்க்க

- **27** தொடக்கம் **29** வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொல் ஒவ்வொன்றினதும் **எதிர்ப்பொருள்** தரும் சொல்ல தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

27. சாரம்
    (1) அசரம் (2) சத்து (3) சக்கை (4) விரசம் (......

28. எரிதல்
    (1) ஏற்றல் (2) காய்தல் (3) அகலல் (4) அவிதல் (......

29. காழ்ப்பு
    (1) வன்பு (2) நயப்பு (3) இழிவு (4) துணிவு (......

*(03 புள்ளிக*

- **30** தொடக்கம் **32** வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொல்லுடன் **பொருந்தாத** சொல்லைத் தெரி செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

30. மதி
    (1) திங்கள் (2) புத்தி (3) அளவிடு (4) சோம்பல் (.......

31. வலிமை
    (1) ஆற்றல் (2) வன்மை (3) புகழ் (4) அடல் (.......

32. சலனம்
    (1) காற்று (2) குற்றம் (3) அசைவு (4) சஞ்சலம் (.......

*(03 புள்ளிக*

- **33** தொடக்கம் **35** வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டம் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமா தனிச்சொல்லைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

33. தனக்கே உரிமையாக முழுப் பொருளையும் அனுபவித்தல்
    (1) ஏகபோகம் (2) ஏகாந்தம் (3) ஏகமனது (4) பராதீனம் (........

34. சூரியனையோ சந்திரனையோ சுற்றித் தோன்றும் ஒளிவட்டம்
    (1) பால்வீதி (2) கார்கோள் (3) ஊர்கோள் (4) உட்கோள் (........

35. செய்யுள் சீர்தோறும் முதலாம் எழுத்து ஒத்துவரத் தொடுப்பது
    (1) எதுகை (2) மோனை (3) ஆசுகவி (4) சிலேடை (.........

*(03 புள்ளிகள்*

36. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமாக** விடை தருக.

ஏனைய விதிகளுக்கு இல்லாத பெருமளவிலான அதிகாரம் சட்டத்திற்குண்டு. இதனைச் சட்டத்திற்கும் சமயத்திற்கும் முன்பு நிலவிய நெருங்கிய தொடர்பிலிருந்தும் தற்போது இருந்து வரும் தொடர்பிலிருந்தும் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. பல பண்டைய சமூகங்களில் சட்டமே சமயமாகவும், சமயமே சட்டமாகவும் இருந்தது. சட்டங்கள் கடவுளிடமிருந்து தரப்பட்டவை அல்லது சமூகத்தால் வணங்கி மதிக்கப்பட்டவையாகவும் காணப்பட்டன. மனுதர்ம சட்டம் என்பது இந்துக்களுடைய மத அனுஷ்டானங்களை ஆதாரமாகக் கொண்டு மனு என்பவரால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. புராதன கிறிஸ்தவ சட்டங்களில் "இறைவனால் கையளிக்கப்பட்ட" பத்துக் கட்டளைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சில வேளைகளில் சட்டமானது தெளிவாக அரசன் போன்ற மனிதனால் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம். பல தடவைகளில் அரசன் தெய்வீகத் தன்மையுடையவர் எனவும் அல்லது கடவுளுடன் தொடர்புபட்டவர் என்றும் கூறப்படுகின்றது. இன்று கூட சட்டத்திற்கும் சமயத்திற்கும் இடையிலான தொடர்பு தெளிவாக இருக்கின்றது. சில வேளைகளில் உலகின் பிரதான சமயங்களில் குற்றமாகக் காணப்படும் விடயங்கள் சட்ட ரீதியான குற்றங்களாகவும் காணப்படுகின்றன. கொலை, திருட்டு என்பன இவற்றிற்கான உதாரணங்களாக இருக்கின்றன. மேலதிகமாக சில நாடுகளில் அந்நாட்டு சமய விதிகள் நாட்டின் சட்ட விதிகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. இதனால்தான் நாம், உதாரணமாக, சவுதி அரேபியா இஸ்லாமிய சட்ட விதிகளால் ஆளப்படுகின்றது எனக் கூறுகின்றோம். இதேபோல் இலங்கையிலும் முஸ்லிம் மக்களுக்குரிய இஸ்லாமிய சட்டம், இந்நாட்டின் பொதுச்சட்டத்துடன் சமமாக அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் முக்கியமாக எல்லாச் சமயக் குற்றங்களும் சட்டக் குற்றங்களல்ல என்பது கவனிக்க வேண்டியதொன்றாகும். சமயம் சட்டத்தை விட ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பிரதிபலிக்கின்றது. பல சமயங்கள் பொய் பேசுவதையும், சோரத்தையும் தடை செய்கின்றன எனினும் இவை சட்டப் பிழைகள் அல்ல. அப்படி வேண்டப்படாத செயல்களைத்

[பக் 5 ஐப் பார்க்க

தடுப்பது நல்ல சமூகத்தை உருவாக்கும் என சிந்திக்க முடியும். ஆனால் பல ஜனநாயக சமூகங்கள் அப்படிப்பட்ட செயல்களைத் தடை செய்யவோ தண்டிக்கவோ சட்டத்தை உபயோகப்படுத்தாதிருக்கத் தீர்மானித்திருக்கின்றன. ஏனென்றால், இங்கு சமுதாயம் சுமுகமாகச் செயற்படுவதற்கு அப்படிச் செய்வது அவசியமற்றது அல்லது நடைமுறையில் செய்ய முடியாது எனக் கருதுகின்றார்கள். அதேபோல் சமயத்துடனும் ஒழுக்கத்துடனும் தொடர்புபடாத பலவிதமான விடயங்களிலும் சட்டம் தொடர்புபடுகின்றது. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் போது தலைக்கவசம் அணிய வேண்டும் என சட்டம் தேவைப்படுத்துகின்றது. அல்லது இறுதிவிருப்பாவணம் ஒன்று வலிதானதாக இருப்பதற்கு இரண்டு சாட்சிகள் ஒப்பமிடவேண்டும் எனவும் தேவைப்படுத்துகின்றது. இங்கு சமயம், ஒழுக்கம் சம்பந்தமான அம்சங்கள் எதுவும் இல்லை. இச்சட்டங்கள் சமுதாயத்தையும் தனிநபர்களையும் பாதுகாப்பதற்காகவே வலுவிலிருக்கின்றன. முன்னர் குறிப்பிட்ட விதியானது ஆபத்தைக் குறைப்பதற்கும் பின்னையது மோசடியைத் தவிர்ப்பதற்கும் இருக்கின்றன.

(i) இந்த உரைப்பகுதிக்கேற்ப சமயம் அல்லது ஒழுக்கம் சம்பந்தமான அம்சங்கள் எதுவுமில்லாத சட்டங்கள் யாவை?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(ii) நல்ல சமூகத்தை உருவாக்கும் என சிந்தித்தல் காரியமாக அமையின் அதன் காரணமாக அமைவது யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(iii) இந்த ஆசிரியர் 'சட்டத்திற்கு பெருமளவான அதிகாரம் உண்டு' என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றார்?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(iv) சமயமும் சட்டமும் ஒன்றிலொன்று கவிந்திருப்பதைத் தெளிவாக நிரூபிக்கும் விடயம் யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(v) பொய் பேசுதல், சோரம் போன்ற சமயக் குற்றங்களைத் தடை செய்வதற்குச் சட்டத்தை உபயோகப்படுத்தாதற்கான காரணம் யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

*(03 × 5 = 15 புள்ளிகள்)*

[பக் 6 ஐப் பார்க்க

37. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் சாரம்சத்தை **மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி** எழுதுக. சுருக்கத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக. சுருக்கத்தின் **இறுதியில் நீங்கள் எழுதிய சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.**

சட்டத்தின் விதிகளை மீறுவதன் விளைவுகளிலிருந்து, சட்டமல்லாத ஒழுக்க விதிகளை மீறுவதன் விளைவுகள் முற்றிலும் வேறுபட்டவை. சட்டத்தை மீறும் ஒருவர் தண்டனை போன்ற வெளிப்படையான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி இருக்கும். அதேவேளை அம்மீறலைத் தொடர்ந்து ஏதாவது தண்டனை வழங்கப்பட்டதா எனப் பார்ப்பதற்கு அரசு தலையிடும். மறுபுறம் ஒரு நபர், பொய் பேசுதல் அல்லது அவன் அல்லது அவள் சட்ட முறையாக வேறு ஒருவருக்கு காயம் விளைவித்தல், உட்புறமான பாதிப்பை ஏற்படுத்தும். அதில் அவன் அல்லது அவள் குற்றவுணர்ச்சி அல்லது மனவருத்தம் போன்ற வேறு ஏதாவது ஒன்றினை உணர முடியும். ஆனால் அரசு இதில் தலையிடமாட்டாது. சில வேளைகளில் ஒழுக்கமற்ற முறையில் செயற்பட்டால் அவனது அல்லது அவளது செயலுக்கு எதிராக வேறொரு தனிநபரின் எதிர்தாக்குதலால் பாதிக்கப்படலாம். ஆனால் இன்னமும் இது தனிப்பட்ட பதிலாக இருக்குமேயன்றி அரச அமைப்புக்களின் தலையீட்டுடனான தெளிவான பதிலாக இருக்கமாட்டாது. சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையிலே வேறுபாடுகள் இருப்பினும் பொதுவாக ஒழுக்கமற்ற ஏதோ ஒன்றைச் செய்வதைச் சட்டம் தேவைப்படுத்தவில்லை. ஒருவர் சட்டத்திற்குக் கீழ்ப்படிய கடமை இருக்கின்றதா எனக் கேட்டால் சமூகத்தினுடைய பாதுகாப்பிற்காக ஒருவர் 'ஆம்' எனப் பதில் சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார். இது நல்ல விரும்பத்தக்க நோக்கமாகும். அத்துடன் இதனை நிறைவு செய்வதற்கு உதவி செய்வது ஒவ்வொரு தனிமனிதனுடைய கடப்பாடாகவும் இருக்கின்றது. ஆனால் கெட்ட சட்டங்களைப் பொறுத்தவரை அவற்றின் நிலை என்ன? வெறுமனே ஒரு சிலர் இச்சட்டங்களுடன் உடன்பட மறுக்கிறார்கள் என்பதனால் அவை கெட்ட சட்டங்களாகப் பொருள் கொள்ளப்பட முடியாது. அதாவது உதாரணமாக, வாடகைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள், முறையற்ற விதமாக காணிச் சொந்தக்காரர்களின் உரிமையைக் கட்டுப்படுத்துவதாக தோற்றமளிக்கின்றன. நாங்கள் முட்டாள்தனமான, ஒழுக்கமற்ற சட்டங்களுக்கு தெளிவான உதாரணமாக நாசிகளின் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைக் காண்கின்றோம். அப்பாவி மக்களை சித்திரவதை செய்தல், கொலை செய்தலை இச்சட்டம் தேவைப்படுத்தியது. சட்ட வல்லுநர்கள் அவ்வகையான சட்டங்கள் சட்டமாகக் கருதப்பட வேண்டுமா அல்லது சட்டம் என்பதற்கான வரைவிலக்கணம் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஒழுக்கவிதிகள் ஓரளவாவது இருக்கவேண்டுமா? என்பது தொடர்பாகப் பல நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். இது மிகச் சிக்கலான பகுதியாக இருந்தாலும் எங்களில் பலருக்கு சட்டம் என்றால் அது குறித்துரைக்கப்பட்ட விதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டால் அது போதுமானதாக இருக்கின்றது. அது சட்டமாகவே கொள்ளப்படும். உதாரணமாக பாராளுமன்றத்தினால் ஒரு முறை அது நிறைவேற்றப்பட்டு முறையாக சட்டப்புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டால் நாங்கள் அதனை "உண்மையான சட்டமா" என்பது தொடர்பில் கேள்வி கேட்பதில்லை. அப்படிப்பட்ட நிலையில் சட்டமானது மிகவும் கடுமையானதாகவும் ஒருவரின் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் இருக்கும் பட்சத்தில் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய கடமையை விட மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள ஒழுக்கக் கோவைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது மேலானதாக இருக்கின்றது. அதேவேளை சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்கின்ற பொதுவான கடமை இருக்கின்ற போதும் அச்சட்டம் தெளிவாகக் கொடுமையானதாகவும் நியாயமற்றதாகவும் உள்ள சந்தர்ப்பங்களில் ஒருவர் சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டிய தேவையில்லை.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

[பக் 7 ஐப் பார்க்க

(20 புள்ளிகள்)

38. பின்வரும் தலைப்புக்களில் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **300** சொற்களில் பகுப்பாய்வுக் கட்டுரை ஒன்று எழுதுக.

(i) நாட்டின் நலன் பேணுவதில் சட்டவாக்கத்துறையினதும் நீதித் துறையினதும் பங்களிப்பு

(ii) போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள்

(iii) வெள்ளம், மண்சரிவு முதலான அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதன் அவசியம்

(iv) சர்வதேச சமூகத்திற்கு அச்சுறுத்தலாகவுள்ள மிக மோசமான பயங்கரவாதம்

[பக் 8 ஐப் பார்க்க

(30 புள்ளிகள்)

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2018 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2017 செப்ரெம்பர்

# Competitive Examination for Admission of students to Sri Lanka Law College for Academic Year 2018 - September 2017


## (02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
## General Knowledge and Intelligence

இரண்டு மணித்தியாலம்
Two hours

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

மிக முக்கியம் :

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



* விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

1 2 3 4

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கத்திலும் எழுதுக.

..................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம்:

* இவ்வினாத்தாள் 11 பக்கங்களில் 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
* விடைகளை எழுத முன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.
* எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் இரண்டு மணித்தியாலம் ஆகும்.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
* கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்
* கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.
* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 11 | |
| 3 | 12 - 24 | |
| 4 | 25 - 37 | |
| 5 | 38 - 50 | |
| 6 | 51 - 61 | |
| 7 | 62 - 71 | |
| 8 | 72 - 80 | |
| 9 | 81 - 88 | |
| 10 | 89 - 97 | |
| 11 | 98 - 100 | |
| மொத்தம் | | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I - பொது அறிவு

- 1 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. இலங்கையின் ஆகக்கூடிய நீளம், அகலம் ஆகியன கிலோமீற்றரில் முறையே,
   (1) 413 மற்றும் 216 (2) 423 மற்றும் 216 (3) 433 மற்றும் 226 (4) 453 மற்றும் 236 (.........)

2. இலங்கையின் சனத்தொகைப் பக்கப்பார்வைக்கு (Profile) அமைய இலங்கையின் தற்போதைய பிறப்பு விகிதம் 1000 பேருக்கு,
   (1) 11.0 (2) 13.0 (3) 15.5 (4) 16.0 (.........)

3. பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட ஒருவர் நீதிபதியொருவர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட வேண்டியது,
   (1) 12 மணித்தியாலங்களினுள்ளாகும். (2) 24 மணித்தியாலங்களினுள்ளாகும்.
   (3) 36 மணித்தியாலங்களினுள்ளாகும். (4) 48 மணித்தியாலங்களினுள்ளாகும். (.........)

4. இலங்கையில் ஜுூரர் (அறங்கூறுநர்) சபையுடனான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   (1) 1811 (2) 1814 (3) 1818 (4) 1820 (.........)

5. பின்வரும் எந்த பிரித்தானிய ஆளுநரின் ஆட்சிக்காலத்தில் உயர்நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது?
   (1) பிரெடரிக் நோர்த் (2) தோமஸ் மெயிட்லண்ட்
   (3) எட்வேர்ட் பார்ண்ஸ் (4) ரொபேர்ட் பிரவுண்ஸ் (.........)

6. தற்போது இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளன?
   (1) 20 (2) 22 (3) 24 (4) 25 (.........)

7. பின்வருவனவற்றுள் 1978 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு தொடர்பான **பிழையான** கூற்று எது?
   (1) அது நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதியை மையமாகக் கொண்டுள்ளது.
   (2) அதனூடாக விரிவான அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
   (3) அதில் 172 உறுப்புரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
   (4) அதனால் நிறுவப்படும் அரசின் பணி சனநாயக சமூகத்தை நிறுவுதலாகும். (.........)

8. இலங்கையின் 2016 ஆண்டின், இல 12 இனைக் கொண்ட தகவலறியும் உரிமை தொடர்பான சட்டம் அமுலாகியது அதே வருடத்தின்,
   (1) சனவரி மாதத்திலிருந்தாகும். (2) பெப்ரவரி மாதத்திலிருந்தாகும்.
   (3) ஏப்ரல் மாதத்திலிருந்தாகும். (4) மே மாதத்திலிருந்தாகும். (.........)

9. இலங்கையில் சட்டத்தரணியொருவரை சேவைக்கு உள்வாங்குதல், சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான உத்தியோகபூர்வ அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது,
   (1) நீதி அமைச்சுக்காகும். (2) சட்டமா அதிபருக்காகும்.
   (3) நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்காகும். (4) உயர் நீதிமன்றத்துக்காகும். (.........)

10. பின்வருவோரில் இலங்கையின் சட்டவாக்க சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதற் பெண்மணி யார்?
    (1) திருமதி அட்லின் மொலமுரே (2) திருமதி நேசம் சரவணமுத்து
    (3) திருமதி புளோரண்ஸ் சேனாநாயக்க (4) திருமதி விமலா விஜேவர்தனா (.........)

11. பின்வருவனவற்றுள் மொரகஹகந்த பல்நோக்குச் செயற்றிட்டம் தொடர்பான **பிழையான** கூற்று எது?
    (1) அதன் நீர்த்தேக்கம் பராக்கிரம சமுத்திரம் போன்று ஏறத்தாழ ஆறு மடங்கு பெரியது.
    (2) அதன் மூலம் திருகோணமலை வரை நீர்ப்பாசன வசதி வழங்கப்படும்.
    (3) அதன் மூலம் தேசிய மின்வலையமைப்புக்கு 25 மெகாவாற்று மின் வழங்கப்படும்.
    (4) 2028 ஆம் வருடத்தில் செயற்றிட்ட நடவடிக்கைகள் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகிறது. (.........)

/பக் 3 ஐப் பார்க்க.

12. அண்மையில் இலங்கை அரசினால் கஷ்டப் பிரதேச கிராமங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது?
(1) 75 (2) 100 (3) 125 (4) 150 (.........)

13. பின்வருவனவற்றுள் 50 வருடங்களுக்கு மேலாகப் பழுதடையாது பேணக்கூடிய வித்து வகை யாது?
(1) மிளகு (2) குரக்கன் (3) சாதிக்காய் (4) ஏலம் (.........)

14. பின்வருவனவற்றுள் தற்சமயம் ஒட்டுமொத்த நீதித்துறையையும் மிகக் கவனமாக மறுசீரமைப்புச்செய்ய ஆரம்பித்துள்ள நாடு எது?
(1) இத்தாலி (2) பிரான்சு (3) ஜேர்மனி (4) பிரித்தானியா (.........)

15. 2017 ஆம் ஆண்டின் உலக மகிழ்ச்சி அறிக்கைக்கு (World Happiness Report) அமைய பின்வருவனவற்றில் உலகின் மிகச் சிறந்த மகிழ்ச்சிகரமான நாடு எது?
(1) நோர்வே (2) டென்மார்க் (3) சுவீடன் (4) சுவிற்சர்லாந்து (.........)

16. பின்வருவனவற்றுள் தனிமனிதரின் அந்தரங்கத்தன்மை (Privacy), அடிப்படை மனித உரிமையென உயர் நீதிமன்றத்தினால் அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்ட நாடு எது?
(1) பாகிஸ்தான் (2) பங்களாதேசம் (3) இந்தியா (4) தாய்லாந்து (.........)

17. அரசியலில் 'இடதுசாரி' , 'வலதுசாரி' எனும் பதங்கள் பாவனைக்கு வந்தது,
(1) பிரான்சியப் புரட்சியின் பின்னராகும். (2) அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் பின்னராகும்.
(3) ரஷ்ய புரட்சியின் பின்னராகும். (4) கியூபா புரட்சியின் பின்னராகும். (.........)

18. UNHCR இனால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய 2016 ஆம் ஆண்டிலே உலகம் முழுவதிலும் யுத்த மோதல்களினால் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை
(1) 50.5 மில்லியனாகும். (2) 55.5 மில்லியனாகும்.
(3) 60.5 மில்லியனாகும். (4) 65.5 மில்லியனாகும். (.........)

19. பின்வருவனவற்றுள், முன்னர் மிகவும் செல்வந்த நாடாக விளங்கிய போதும், பின்னர் ஊழல் மலிந்த ஆட்சியினால் பட்டினி, வன்முறை ஆகியவற்றினால் இடருக்குள்ளான மக்கள் வாழும் இலத்தீன் அமெரிக்க நாடு எது?
(1) பிரேசில் (2) சிலி (3) வெனிசூலா (4) பொலீவியா (.........)

20. பின்வருவனவற்றுள் ஏறத்தாழ 125 எரிமலைகளைக் கொண்ட ஐரோப்பிய நாடு எது?
(1) சுவிற்சர்லாந்து (2) ஐஸ்லாந்து (3) சுவீடன் (4) இத்தாலி (.........)

21. தற்போதைய உலக சனத்தொகை பில்லியனில்,
(1) 7.2 ஆகும். (2) 7.4 ஆகும். (3) 7.5 ஆகும். (4) 7.6 ஆகும். (.........)

22. 'Little Sunfish' எனக் குறிப்பிடப்படுவது,
(1) ஜப்பானில் உருவாக்கப்பட்ட ரோபோ ஆகும்.
(2) பசுபிக் சமுத்திரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மீனினமாகும்.
(3) பிரான்சில் தயாரிக்கப்பட்ட துப்பறியும் திரைப்படமாகும்.
(4) நைஜீரியா எழுத்தாளரொருவரின் நாவலாகும். (.........)

23. பின்வருவோரில், "மனித இனமே உண்மையான தேசிய இனமாகும் (True nationality is mankind)" எனும் புகழ்வாய்ந்த கூற்றினை வெளியிட்டவர் யார்?
(1) மகாத்மா காந்தி (2) ரவீந்திரநாத் தாகூர்
(3) எச்.ஜீ.வேல்ஸ் (4) நெல்சன் மண்டேலா (.........)

24. பின்வருவனவற்றில் **பொருத்தமற்ற** சோடி எது?
(1) விலியம் ஷெரினா - பட்மின்ரன் (2) டேவிட் பேகம் - காற்பந்து
(3) டைகர் வூட்ஸ் - கொல்ப் (4) உசேன் போல்ட் - மெய்வல்லுநர் விளையாட்டு (.........)

/பக் 4 ஐப் பார்க்க.

25. ஒரு பில்லியனின் நூறிலொன்று சமமாவது,
   (1) ஒரு மில்லியனுக்காகும்.
   (2) பத்து மில்லியனுக்காகும்.
   (3) நூறு மில்லியனுக்காகும்.
   (4) ஆயிரம் மில்லியனுக்காகும். (.....

26. பின்வருவோரில் ஏழு தசாப்தங்களாக நிலவிய கம்யூனிச ஆட்சிமுறைமை வீழ்ச்சியடையக் காரணமான கிளாஸ்னொட் (Glasnot) எனும் திறந்த தன்மை - ப்ரொஸ்ரொய்க்கா (Prestroica) எனும் பொருளாதாரச் சீர்திருத்தம் ஆகிய இரட்டைச் சீர்திருத்தங்களை அறிமுகஞ்செய்த ரஷ்ய சனாதிபதி யார்?
   (1) மிகெயில் ஹோர்பச்சோவ்
   (2) போரிஸ் யெல்ஸ்ரின்
   (3) விளாடிமீர் பூடின்
   (4) லியோனிட் பிரஷ்னோவ் (.........)

27. பின்வருவனவற்றுள் தற்சமயம், எப்போதும் உரிய நேரத்தில் வேலைகளை மேற்கொள்வதன் மூலம் உயர் ஒழுக்க விழுமியத்தைக் கொண்டுள்ள நாடு யாது?
   (1) சிங்கப்பூர் (2) சீனா (3) ஜப்பான் (4) தென்கொரியா (.........)

28. பின்வருவனவற்றுள் e - அரசு நிருவாகத்தின் எதிர்பார்ப்பாக **அமையாதது** எது?
   (1) அரசின் வினைத்திறனை மேம்படுத்தல்
   (2) அரச நிருவாகத்தின் கட்டமைப்பு, தொழிற்பாடு ஆகியவற்றை மாற்றியமைத்தல்
   (3) மக்களுக்கான சேவைகளை விரைவுபடுத்தல்
   (4) மக்கள் தமது உரிமைகளை விளங்கிக்கொள்ள உதவுதல் (.........)

29. கனிய எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றுக்கான அகழ்வுகளை நிறுத்துவதென அண்மையில் தீர்மானம் மேற்கொண்ட ஐரோப்பிய நாடு
   (1) ஜேர்மனி (2) சுவிற்சர்லாந்து (3) சுவீடன் (4) பிரான்ஸ் (.........)

30. பின்வருவனவற்றுள் மக்களிடையே விழுமியங்களை விருத்தி செய்வதற்கான நீதிக்கதைகள் அடங்கிய புகழ்பெற்ற நூல் எது?
   (1) பஞ்சதந்திரம் (2) இராமாயணம் (3) ஜானகி ஹரணய (4) மேகதூதம் (.........)

● **31** தொடக்கம் **50** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையை தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. இலங்கையில் தேசிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு முதன்முதலில் நிறுவப்பட்ட அரச நிறுவகம் யாது?

.................................................................................................................................

32. இணக்கசபையின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் எத்தனை வருடங்களாகும்?

.................................................................................................................................

33. கண்டி அரசர்கள் தமது பாதுகாப்பிற்காக போர்த்துக்கேய போர்வீரர்களைக் குடியமர்த்திய பிரதேசம் யாது?

.................................................................................................................................

34. தற்போது இலங்கையில் எத்தனை சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளன?

.................................................................................................................................

35. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் (Monetory Board) உத்தியோகபூர்வ தலைவர் யார்?

.................................................................................................................................

36. 1980 ஆம் ஆண்டின் இல 47 இற்குரிய சட்டத்துக்கு அமைய இலங்கையில் வீணாகும் நீரைச் சுத்திகரிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள நிறுவகம் எது?

.................................................................................................................................

37. தற்சமயம் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பினைப் பெறத்தக்க வகையில் தொழிற்பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ள அமைச்சு எது?

.................................................................................................................................

/பக் 5 ஐப் பார்க்க.

38. இலங்கையில் மருத்துவக் கல்வியின் தரக் கட்டுப்பாட்டாளராகச் செயற்படும் நிறுவகம் எது?

........................................................................................................................................

39. காணி உரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள சட்டம் எது?

........................................................................................................................................

40. மிகவும் பண்டைக்காலந் தொட்டு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சிறுஏற்றுமதிப் பயிர் யாது?

........................................................................................................................................

41. ஆசிய - பசுபிக் வலயத்தில் சட்டத்துறைத் தோழமைக்கான அமைப்பு (Organization of the legal fraternity) யாது?

........................................................................................................................................

42. சார்க் (SAARC) எனும் சுருக்கப்பெயர் மூலமாகக் குறிப்பிடப்படும் அமைப்பின் முழுமையான பெயர் யாது?

........................................................................................................................................

43. கடல் மட்டத்திலிருந்து 90% தாழ்வாக அமைந்துள்ள ஐரோப்பிய நகரம் யாது?

........................................................................................................................................

44. 2020 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நாடு யாது?

........................................................................................................................................

45. உலகிலுள்ள ஒரேயொரு பௌத்த இராச்சியம் யாது?

........................................................................................................................................

46. இலக்கியத்துக்கான நோபல் பரிசுபெற்ற முதல் ஆசிய நாட்டவர் யார்?

........................................................................................................................................

47. "எனக்கொரு கனவு உண்டு" எனப் பிரகடனப்படுத்தி, வெள்ளையர் - கறுப்பர் என்ற வேறுபாட்டைக் குறைப்பதற்கெனச் செயற்பட்ட கறுப்பின அமெரிக்கத் தலைவர் யார்?

........................................................................................................................................

48. யுத்தக் குற்றச்சாட்டுகள், இனப்படுகொலை, மனித குலத்துக்கெதிரான அட்டூழியங்கள் ஆகியவற்றுடன் தொடர்பானவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பிக்கக்கூடிய ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நீதிமன்றத்தின் பெயர் யாது?

........................................................................................................................................

49. தனது நாட்டவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் சுதந்திரத்தை வழங்கியதன் மூலமாக செழிப்புள்ள நாட்டை உருவாக்கிய ஆசிய பிரதம மந்திரி யார்?

........................................................................................................................................

50. சீனாவுக்கு வெளியே சீனாவினால் அமைக்கப்பட்ட முதல் இராணுவ முகாமின் பெயர் யாது?

........................................................................................................................................

## II பகுதி - நுண்ணறிவுப் பரீட்சை

● **51** தொடக்கம் **55** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்கள் குறித்த பண்பொன்றிற்கேற்ப ஒரே குழுவினுள் உள்ளடக்கப்பட முடியும். அவ்வாறு ஒரே குழுவினுள் உள்ளடக்கப்பட **முடியாத** எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

51. (1) ஆருடம் கூறல் (2) எதிர்வுகூறல் (3) சந்தேகம் (4) கருதுகோள் (.........)

52. (1) கட்டளைகள் (2) ஏற்பாடுகள் (3) பிரமாணம் (4) ஒப்பந்தம் (.........)

53. (1) அபராதம் (2) தண்டனை (3) வாடகை (4) எச்சரிக்கை (.........)

54. (1) சிறைச்சாலை (2) நீதிமன்றம் (3) மறியற்சாலை (4) வைத்தியசாலை (.........)

55. (1) சட்டத்தரணி (2) மஜிஸ்ரேட் (3) நொத்தாரிஸ் (4) குற்றவாளி (.........)

● **56** தொடக்கம் **60** வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு குறியீட்டு முறைக்கேற்ப ஆங்கில எழுத்துக்கள் ஆறிற்கு தரப்பட்டுள்ள எண்ரீதியான குறியீடுகள் அந்தந்த சொற்களின் எதிரே ஒழுங்குமுறையின்றிக் காட்டப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

FILLER - 942527 FACT - 6304 LATTICE - 2936530

FAILURE - 5924786 ISLE - 5129

இந்த தகவல்களுக்கேற்ப கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு, செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

56. CARICATURE என்ற ஆங்கில சொல்லிலே ஒவ்வொரு எழுத்துக்களினாலும் சரியான குறியீட்டை சரியான ஒழுங்கு முறையில் காட்டும் விடை இவற்றுள் எது?
(1) 0675063879 (2) 7903687270 (3) 7906387279 (4) 1378038729 (.........)

57. STRUCTURE என்ற ஆங்கில சொல்லிலே ஒவ்வொரு எழுத்துக்களினாலும் சரியான குறியீட்டை சரியான ஒழுங்கு முறையில் காட்டும் விடை இவற்றுள் எது?
(1) 387287310 (2) 037813278 (3) 137803879 (4) 275609871 (.........)

58. CREATE என்ற சொல்லின் சரியான குறியீடு யாது?
(1) 079639 (2) 623027 (3) 751236 (4) 823720 (.........)

59. 2633509 என்ற சரியான குறியீட்டு முறைக்குரிய ஆங்கிலச் சொல் எது?
(1) FAILURE (2) CREATES (3) LATTICE (4) STATUTE (.........)

60. 4529 என்ற சரியான குறியீட்டு முறைக்குரிய ஆங்கிலச் சொல் எது?
(1) TACT (2) FATE (3) TILE (4) FILE (.........)

● **61** தொடக்கம் **65** வரையுள்ள வினாக்கள் குறித்த குடும்பமொன்றினது உறுப்பினர்கள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

✤ அந்தக் குடும்பத்திலே ***A, B, C, D, E, F*** என்ற ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.

- ❊ ***A*** யும் ***B*** யும் திருமணமுடித்துள்ளதோடு அவர்களுள் ***A*** கணவராவார்.
- ❊ ***C*** யினது மகன் ***D*** ஆவார். அவர் ***A*** யினது ஒரேயொரு சகோதரனாவார்.
- ❊ ***D*** யினது சகோதரி ***E*** ஆவார்.
- ❊ ***F*** இனது மகனுடைய மனைவி ***B*** ஆவார்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

61. ***F*** இற்கு ***A*** என்பவர் என்ன உறவுமுறையானவர்?
(1) தாய் (2) மகள் (3) சகோதரி (4) மாமி (.........)

62. *E* யிற்கு *C* என்பவர் என்ன உறவு முறையானவர்?
(1) சகோதரி (2) மகள் (3) மாமி (4) தாய் (.........)

63. *C* இற்கு *B* என்பவர் என்ன உறவு முறையானவர்?
(1) சகோதரன் (2) கணவனின் தந்தை
(3) மனைவியின் தந்தை (4) மகன் (.........)

64. *F* இற்கு *C* என்பவர் என்ன உறவு முறையானவர்?
(1) மாமி (2) மகள் (3) மனைவி (4) சகோதரி (.........)

65. இந்தக் குடும்பத்திலே எத்தனை ஆண்கள் உள்ளனர்?
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு (.........)

● **66** தொடக்கம் **70** வரையுள்ள வினாக்கள் ஐந்து மாணவர்களினது திறமைகள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

※ சந்திரன் மற்றும் வித்தகன் ஆகியோர் உயிரியல் மற்றும் இரசாயனவியலில் திறமையானவர்கள்.

※ அந்தகன் மற்றும் சந்திரன் ஆகியோர் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியலில் திறமையானவர்கள்

※ அந்தகன், கந்தகன் மற்றும் தமரன் ஆகியோர் பௌதீகவியல் மற்றும் வரலாற்றில் திறமையானவர்கள்.

※ தமரன் மற்றும் அந்தகன் ஆகியோர் இரசாயனவியல் மற்றும் கணிதத்தில் திறமையானவர்கள்

※ கந்தகன் மற்றும் வித்தகன் ஆகியோர் வரலாறு மற்றும் உயிரியலில் திறமையானவர்கள்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

66. பௌதீகவியல், வரலாறு மற்றும் உயிரியலில் திறமையானவர் யார்?
(1) அந்தகன் (2) சந்திரன் (3) கந்தகன் (4) வித்தகன் (.........)

67. பௌதீகவியல் மற்றும் வரலாற்றில் திறமையானவராகவும் இரசாயனவியலில் திறமை **அற்றவருமானவர்** யார்?
(1) அந்தகன் (2) சந்திரன் (3) தமரன் (4) கந்தகன் (.........)

68. இரசாயனவியல், வரலாறு மற்றும் உயிரியலில் திறமையானவர் யார்?
(1) அந்தகன் (2) சந்திரன் (3) தமரன் (4) வித்தகன் (.........)

69. வரலாறு, பௌதீகவியல், இரசாயனவியல், கணிதம் போன்ற பாடங்களில் திறமையானவர்கள் யாவர்?
(1) அந்தகன் மற்றும் தமரன் (2) சந்திரன் மற்றும் கந்தகன்
(3) தமரன் மற்றும் வித்தகன் (4) கந்தகன் மற்றும் தமரன் (.........)

70. பௌதிகவியல், உயிரியல், இரசாயனவியல் போன்ற மூன்று பாடங்களிலும் திறமையானவர் யார்?
(1) அந்தகன் (2) சந்திரன் (3) கந்தகன் (4) வித்தகன் (.........)

● **71** தொடக்கம் **75** வரையுள்ள வினாக்கள் சீட்டு விளையாட்டில் ஈடுபடும் நண்பிகள் நான்குபேர் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாக் கொண்டவை.

✤ சாரதா, மாதவி, நிமலா, அமிலா என்ற நான்கு நண்பிகளில் ஒவ்வொருவரும் நான்கு சீட்டுக்களைக் கைகளில் வைத்திருக்கின்றனர். அந்த ஒவ்வொருவரினதும் கைகளிலும் ஏஸ், ராஜா, ராணி, ஜே என்ற சீட்டுக்களில் குறித்த ஒரு சீட்டுப்படி உள்ளது. அவ்வாறு அவர்களின் கைகளிலே ஸ்கோபர், ஆரதன், கலாவர், டயமன் என சகல வகையான சீட்டுக்கள் உள்ளன.

※ சாரதாவின் கைகளில் ஸ்கோபர் ஏஸ் உம் டயமன் ராணியும் உள்ளன.

※ மாதவியின் கைகளில் கலாவர் ஏஸ் உம் டயமன் ராஜாவும் உள்ளன.

※ நிமலாவின் கைகளில் கலாவர் ராணியும் ஸ்கோபர் ராஜாவும் உள்ளன.

※ அமிலாவின் கைகளிலே கலாவர் ஜே உள்ளது.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

71. டயமன் ஏஸ் சீட்டு யாரின் கைகளில் உள்ளது?
(1) சாரதா (2) மாதவி (3) நிமலா (4) அமிலா (.........)

[பக் 8 ஐப் பார்க்க.


72. ஆரதன் ஜே யாரின் கைகளில் உள்ளது?
(1) சாரதா (2) மாதவி (3) நிமலா (4) அமிலா

73. ஸ்கோபர் ராணி யாரின் கைகளில் உள்ளது?
(1) சாரதா (2) மாதவி (3) நிமலா (4) அமிலா

74. நிமலாவின் கைகளில் இருப்பது இவற்றுள் எதுவாகும்?
(1) ஆரதன் ஏஸ் (2) ஸ்கோபர் ஜே (3) ஆரதன் ராஜா (4) ஸ்கோபர் ராணி (........)

75. அமிலாவின் கைகளில் இருப்பது இவற்றுள் எதுவாகும்?
(1) ஆரதன் ஏஸ் (2) ஆரதன் ராணி (3) ஆரதன் ராஜா (4) கலாவர ராஜா (........)

● **76** தொடக்கம் **80** வரையுள்ள வினாக்கள் பக்கமொன்றின் நீளம் 24 சென்ரிமீற்றரான சதுரமுகி அமையுமாறு ஒன்று சேர்க்கப்பட்ட நீளத்தில் சமனானதும் அகலத்தில் வேறுபட்டதுமான சில மரத்துண்டுகள் உள்ளடக்கப்பட்ட கீழுள்ள உருவை அடிப்படையாகக் கொண்டது.




அதற்கேற்ப ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய விடைக்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

76. இங்கு சேர்க்கப்பட்டுள்ள மரத்துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
(1) 6 (2) 8 (3) 9 (4) 10 (.........)

77. இந்த சகல மரத்துண்டுகளையும் நீட்டி ஒரே நீளமாக அமைத்தால் வரிசையின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்களாகும்?
(1) 120 (2) 200 (3) 210 (4) 216 (.........)

78. இந்த சகல மரத்துண்டுகளையும் கொண்டு ஒரே மட்டத்திலே செவ்வகமுகி வடிவின் மேற்பரப்பு கிடைக்குமாறு ஒன்றிற்கொன்று தொடுகையுறுமாறு நிலத்தின் மீது வைக்கப்பட்டது எனின் அந்த மேற்பரப்பினது பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்களாகும்?
(1) 1428 (2) 1628 (3) 1728 (4) 1828 (.........)

79. இங்கு ***B*** என்ற எழுத்தினால் காட்டப்படும் மரத்துண்டுடன் தொடுகையுறும் மரத்துண்டுகளின் எண்ணிக்கை என்ன?
(1) 5 (2) 7 (3) 8 (4) எல்லாம் (.........)

80. ***A, B, C*** என்ற எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள மரத் துண்டுகளுள் ஏனைய மரத்துண்டுகள் 5 உடன் தொடுகையுற்றிருக்கும் மரத்துண்டு/துண்டுகள் எவை?
(1) ***A*** (2) ***B*** (3) ***A*** மற்றும் ***C*** (4) ***B*** மற்றும் ***C*** (.........)

● **81** மற்றும் **82** ஆகிய ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கண்டு அவ்விடையை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் **மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

81. 48 கண்ணாடி மாபிள்கள் $A$, $B$, $C$ என்ற மூன்று போத்தல்களினுள் சமனின்றி இடப்பட்டு வேறாக்கப்பட்டன. அதன் பின்னர் $B$ என்ற போத்தலிலே உள்ள மாபிள்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையில் $A$ என்ற போத்தலில் இருந்து $B$ என்ற போத்தலில் இட்டு, அதன் பின்னர் $C$ என்ற போத்தலில் உள்ள மாபிள்களின் எண்ணிக்கைக்கு சமனான மாபிள்கள் $B$ என்ற போத்தலில் இருந்து $C$ என்ற போத்தலுக்கு இடப்பட்டது. அதன்பின்னர் $C$ என்ற போத்தலில் இருந்து $A$ என்ற போத்தலுக்கு, $A$ என்ற போத்தலில் எஞ்சியுள்ள மாபிள்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையில் இடப்பட்டது. அப்போது மூன்று போத்தல்களிலும் உள்ள மாபிள்களின் எண்ணிக்கைகள் ஒன்றிற்கொன்று சமனாக அமைந்தன. அதற்கேற்ப ஆரம்பத்திலே மிகக் **குறைந்த** மாபிள்களைக் கொண்ட போத்தலில் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை எவ்வளவு? (.........)

82. டேவிட் என்பவர் ஒரு தொழிலாளி. அவரது நாட் சம்பளம் 1500 ரூபாய்களாகும். அரைநாட்கள் வேலை செய்தால் அதற்காக சம்பளமானது 900 ரூபாய்களாகும். 10 நாட்கள் வேலை செய்தபின்னர் அவர் பெற்றுக்கொண்ட சம்பளம் 12 600 ரூபாய்களாயிருப்பின் அவர் வேலை செய்த அரைநாட்களின் எண்ணிக்கை எவ்வளவு? (.........)

● **83** தொடக்கம் **85** வரையான வினாக்கள் தொங்கு பாலத்தைக் கடந்து செல்லும் அனுலன், மகிழன், ஜனகன், தாசன் என்ற நான்கு நண்பர்கள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

* இரவு நேரப் பயணத்திற்காக புறப்பட்ட இந்த நான்கு பேருக்கும் காடு ஒன்றிலுள்ள தொங்கு பாலத்தைக் கடக்க நேரிட்டது. பாலத்தினூடாக ஒரு தடவைக்கு இருவர் மட்டுமே செல்ல முடியும். மேலும் அவர்களுக்கு ஒரு மின் சூளை மட்டுமே பயன்படுத்த முடியும். எந்தவொருவரும் இருட்டிலே பயணஞ் செய்ய முடியாது.
* ஒவ்வொருவருக்கும் கடப்பதற்கு எடுக்கும் மிகக் குறைந்த நேரம் மாறுபடும். அனுலனுக்கு 2 நிமிடங்களிலும் மகிழனுக்கு 3 நிமிடங்களிலும் பாலத்தைக் கடந்து செல்ல முடியும். எனினும் தாசனுக்கும் ஜனகனுக்கும் அதற்காக 10 நிமிடங்கள் வீதம் தேவைப்படும்.
* அவர்கள் மிகக் குறைந்த நேரத்திலே சென்றடைய வேண்டும். அந்த நால்வருக்கும் பாலத்தைக் கடப்பதற்காக 21 நிமிடங்கள் செலவாகும்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கண்டு அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

83. முதலில் இருவர் பாலத்தைக் கடந்து சென்றடைந்தனர். அதற்காக அவர்கள் செலவழித்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்? (.........)

84. முதலில் கடந்து சென்றவர்களுள் ஒருவர் மீண்டும் வருகை தந்ததோடு இன்னொருவருடன் மறுபக்கம் சென்றார். அதற்காக அவர்கள் செலவு செய்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்? (.........)

85. இறுதியிலே ஒருவர் மீண்டும் வந்து எஞ்சியிருந்த நண்பனுடன் கடந்து சென்றார். அதற்காக செலவு செய்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்? (.........)

● **86** தொடக்கம் **90** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைக் கண்டு அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

86. அகிலா, சுசிலா, வினிதா என்ற மூன்று நண்பிகளிடமும் குறித்த பணத்தொகைகள் உள்ளது. அகிலா மற்றும் வினிதா ஆகிய இருவரிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை சுசீலாவிடம் உள்ள பணத்தின் இரு மடங்காகும். சுசிலா மற்றும் வினிதா ஆகிய இருவரிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகையானது அகிலாவிடம் உள்ள பணத்திற்குச் சமனாகும். மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் 2 700 ரூபாய்களாகும். அதற்கேற்ப அகிலாவிடம் உள்ள பணம் எத்தனை ரூபாய்களாகும்? (.........)

87. எனது கைக்கடிகாரமானது நேற்று இரவு 12.00 மணிக்கு சரியான நேரத்தைக் காட்டினாலும் அப்போதிருந்து ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 14 நிமிடங்கள்படி குறைவாக நேரத்தைக் காட்டியது, பின்பு 7 மணித்தியாலங்களுக்கு முன்னர் அதன் நேரம் 3.50 எனக் காட்டி செயலிழந்து போனது. அவ்வாறெனின் தற்போது சரியான நேரம் என்னவாகும்? (.........)

88. இந்துஜாவினதும் சிந்துஜாவினதும் பிறந்த நாட்கள் ஒரே நாளில் வந்தன. இப்போது இந்துஜாவினது வயதானது சிந்துஜாவின் வயதின் மூன்று மடங்காகும். எனினும் மேலும் 5 வருடங்களில் இந்துஜாவின் வயதானது சிந்துஜாவின் வயதின் இரு மடங்காகும். இந்துஜாவின் வயதானது சிந்துஜாவின் வயதின் ஆறு மடங்காவது இந்துஜாவின் வயது எத்தனை வருடங்களாக இருக்கும் போதாகும்? (.........)

/பக் 10 ஐப் பார்க்க.

89. தாங்கியொன்றை நீரால் நிரப்புவதற்காக $A$ என்ற குழாய் 2 மணித்தியாலங்களும் $B$ என்ற குழாய் 3 மணித்தியாலங்களும் எடுக்கும். இரண்டு குழாய்களையும் ஒரே தடவையில் திறந்து தாங்கி நிரப்பப்பட்டால் அதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடங்களாகும்? (.........)

90. தாங்கியொன்றை நீரால் நிரப்புவதற்கு $A$ என்ற குழாயிற்கு 4 மணித்தியாலங்கள் செலவாகும். தாங்கியை வெறுமையாக்குவதற்காக $B$ என்ற குழாயிற்கு 8 மணித்தியாலங்கள் எடுக்கும். இரு குழாய்களும் ஒரே தடவையிலே செயற்படுத்தப்பட்டால் தாங்கி நிரம்புவதற்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவாகும்? (.........)

- **91** தொடக்கம் **95** வரையுள்ள வினாக்கள் திருமண விழாவின்போது சமனான இடைவெளியில் கதிரைகள் இடப்பட்ட மேசையொன்றைச் சுற்றி வட்டமாக அமர்ந்துள்ள $A, B, C, D, E, F, G, H$ விருந்தினர்கள் எட்டுப்பேர் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
  - ✳ $A$ யின் எதிரே $E$ யும் $D$ இற்கு இடதுபக்கத்திலே அண்மையாக $E$ யும் $D$ இற்கு இடதுபக்கமாக இருவருக்கு பிறகு $G$ அமர்ந்துள்ளார்.
  - ✳ $F$ இன் எதிரே $B$ யும் $F$ மற்றும் $B$ ஆகிய இருவருக்கும் சரிநடுவிலே $D$ யும் $A$ யிற்கு இடது பக்கத்திலே அண்மையிலே $B$ யும் அமர்ந்துள்ளனர்.
  - ✳ $D$ மற்றும் $H$ இன் இடையே மூவரும் $D$ மற்றும் $B$ யினரிடையே ஒருவரும் அமர்ந்துள்ளனர்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

91. $C$ யின் எதிரே அமர்ந்து இருப்பவர் யார்?
(1) $D$ (2) $F$ (3) $G$ (4) $A$ (.........)

92. $A$ மற்றும் $C$ இடையே அமர்ந்திருப்பவர் யார்?
(1) $B$ (2) $E$ (3) $H$ (4) $C$ (.........)


93. $H$ இன் எதிரே அமர்ந்து இருப்பவர் யார்?
(1) $E$ (2) $C$ (3) $D$ (4) $A$ (.........)

94. $D$ யின் இருபுறமும் அமர்ந்து இருப்பவர்கள் யாவர்?
(1) $A$ மற்றும் $C$ (2) $C$ மற்றும் $E$ (3) $E$ மற்றும் $B$ (4) $F$ மற்றும் $G$ (.........)


95. $A$ யின் இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் அமர்ந்திருப்பவர்கள் யாவர்?
(1) $H$ மற்றும் $F$ (2) $H$ மற்றும் $B$ (3) $C$ மற்றும் $E$ (4) $D$ மற்றும் $H$ (.........)

- **96** தொடக்கம் **100** வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் ஒவ்வொரு முகங்களிலும் வெவ்வேறு குறியீடுகளைக் கொண்ட சதுரமுகிகளின் ஐந்து உருக்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் சில சதுரமுகிகளில் காட்டப்படுவது ஒரே சதுரமுகியின் வேறுபட்ட தோற்றங்களாகும். அதற்கேற்ப ஒவ்வொரு வினாவின் கீழேயும் உள்ள ஐந்து சதுரமுகி உருக்களிலும்
  - ✳ ஒரே சமனான சதுரமுகியின் தோற்றம் ஒன்று மட்டும் உள்ளதெனின் இலக்கம் **1** ஐயும்
  - ✳ ஒரே சமனான சதுரமுகிகளின் தோற்றம் இரண்டு உள்ளதெனின் இலக்கம் **2** ஐயும்
  - ✳ ஒரே சமனான சதுரமுகிகளின் தோற்றம் மூன்று உள்ளதெனின் இலக்கம் **3** ஐயும்
  - ✳ ஒரே சமனான சதுரமுகிகளின் தோற்றம் நான்கு உள்ளதெனின் இலக்கம் **4** ஐயும்
  - ✳ ஒரே சமனான சதுரமுகிகளின் தோற்றம் ஐந்து உள்ளதெனின் இலக்கம் **5** ஐயும்

ஒவ்வொரு வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.


96.


(.........)

97.



(.........)

98.





(.........)

99.




(.........)

100.




(.........)

* * *